# பா.ஜ.க.வுக்குப் பல்லக்குத் தூக்கும் துரோகிகளை விரட்டியடிக்க திரண்ட மக்கள் திரள்!



## தமிழ் மண்ணில் கருப்பு – சிவப்பு – நீலக் கொடிகள்தான் பறக்கும்! மக்களை இழிவாக நடத்தும் ஆதிக்கத்திற்கான

# காவிக் கொடியை தமிழர்கள் ஒருபோதும் பறக்க விடமாட்டார்கள்!

## ஆண்டிப்பட்டி – தேர்தல் பிரச்சார மாபெரும் பொதுக்கூட்டத்தில்

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!



**ஆண்டிப்பட்டி, ஏப். 19–**

**தமிழ் மண்ணில் கருப்பு - சிவப்பு - நீலக்கொடிகள்தான் பறக்கும் மக்களை இழிவாக நடத்தும் ஆதிக்கத்திற்கான காவிக் கொடியை தமிழர்கள் ஒருபோதும் பறக்க விடமாட்டார்கள் என்று ஆண்டிப்பட்டி பரப்புரை கூட்டத்தில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.**

**கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.04.2026) ஆண்டிப்பட்டியில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய உரை வருமாறு:**

**இயற்கையின் அழகும், வைகை அணையின் எழிலும் வரவேற்க, நான் தேனி மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்!**

**இன்றைக்கு நாம் எதிர்கொண்டிருப்பது தேர்தல் களம் மட்டுமல்ல; போர்க்களம்!**

தமிழ் - தமிழினம் - தமிழ்நாடு இந்தச் சொற்களைக் கேட்டாலே கசக்கும் கூட்டம், நம்முடைய குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கக் கூடாது என்று சதி வேலையைச் செய்திருக்கிறார்கள். இந்தியாவில் குறிப்பிட்ட சில மாநிலங்களில் மதவெறியை வளர்த்து, அதன் மூலமாக இந்த நாட்டை ஆள்வதற்குப் பாசிச பா.ஜ.க. செய்திருக்கும் சூழ்ச்சிதான், தொகுதி மறுவரையறை.

### சதிக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்புக் கொடி ஏற்றினேன்!

தென் மாநிலங்களில் தேர்தல் என்பது வெறும் சம்பிரதாயம்தான். மேலோட்டமாகப் பார்த்தால், பிரதமரும், உள்துறை அமைச்சரும் சொல்வது போன்று, நம்முடைய தொகுதி எண்ணிக்கையை அதிகரிப்பது போன்று, ஒரு 'ஷோ' தெரியும்; ஆனால், உள்ளபடியே நமக்கு வர வேண்டிய எம்.பி.-க்கள் எண்ணிக்கையைக் குறைத்திருக்கிறார்கள்.

இந்தச் சதிக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று நான் கருப்புக் கொடி ஏற்றினேன். தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் மக்கள் தங்கள் வீடுகளில் கருப்புக் கொடி கட்டித் தங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள்... தமிழ்நாடு மக்களின் பிரதிநிதியாக முதலமைச்சர் பொறுப்பில் இருக்கும் என்னுடைய எதிர்ப்பு என்பது, ஒட்டுமொத்த தமிழ் மக்களின் எதிர்ப்பு.

### மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவின் ஆணவப் பேச்சு!

இதை நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டு, டி.ஆர். பாலு அவர்கள் பேசினார். அதற்கு, மக்களவைத் தலைவராக அனைவருக்கும் பொதுவானவராக நடந்து கொள்ள வேண்டிய சபாநாயகர் ஓம் பிர்லா அவர்கள், "நீங்கள் கருப்புக் கொடி ஏற்றினால் என்ன? நீலக்கொடி ஏற்றினால் என்ன?" என்று ஆணவத்தோடு பேசியிருக்கிறார். அவர் தனிப்பட்ட ஸ்டாலினை அவமதிக்கவில்லை; தமிழ்நாட்டின் குரலை - உணர்வுகளை ஏளனப்படுத்திப் பேசினார்.

இன்றைக்கு அதற்கான பதிலடியை அருமைத் தங்கை கனிமொழி அவர்கள் நாடாளுமன்றத்தில் தந்திருக்கிறார். தமிழர்களை அவமதிப்பதை மட்டுமே தங்களுடைய நோக்கமாக வைத்துப் பேசும் பா.ஜ.க.வின் குரலாக இருக்கும் ஓம் பிர்லா அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன்... இந்த மண்ணில் - சமத்துவம், சமூகநீதி, பொதுவுடைமைக்கான, கருப்பு - சிவப்பு - நீலக் கொடிகள்தான் பறக்கும்!

இன்னும் சொல்கிறேன்... திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும் வரை, உங்களுடைய காவிக் கொடி ஒருபோதும் இங்கே பறக்காது! தன்மானமுள்ள தமிழர்கள் பறக்கவும் விடமாட்டார்கள்!

நாடாளுமன்றத்தில் இன்றைக்கு நம்முடைய அத்தனை உரிமைகளையும் பறிக்கப் பார்க்கிறார்கள்; இந்த அநீதிக்கு முடிவுரை எழுத வேண்டும்; அதற்குத் தமிழ்நாட்டில் வலிமையான நம்முடைய மாநில அரசு அமைய வேண்டும்! தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக நெஞ்சுரத்தோடு போராடும் அரசு அமைய வேண்டும்! அதற்காகத்தான், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்கு கேட்க உங்களில் ஒருவனாக நான் இங்கு வந்திருக்கிறேன்.

தமிழ்நாடா? டெல்லியா? என்ற இந்தப் போரில், பா.ஜ.க. எனும் சர்வாதிகார பருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும்! பா.ஜ.க.வுக்குத் துணை போன துரோகத்தின் முழு உருவமான பழனிசாமியின் அடிமை அ.தி.மு.க. துரத்தியடிக்கப்பட வேண்டும்!

அதற்கு, இந்த மேடையில் உங்களுடைய ஆதரவைக் கேட்டு வந்திருக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை நான் இப்போது உங்கள் அனுமதியோடு அறிமுகப்படுத்த விரும்புகிறேன்.

### வேட்பாளர்கள் அறிமுகம்!

முதலில், போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி. நம்முடைய வெல்லும் வேட்பாளர் பெருமதிப்பிற்குரிய சகோதரர் ஓ.பி.எஸ். என்று அனைவராலும் அழைக்கப்படும் ஓ. பன்னீர்செல்வம் அவர்கள். நம்முடைய அன்புக்குரிய ஓ.பி.எஸ் அவர்களுக்கு அறிமுகம் தேவையா? உங்கள் வீட்டுப் பிள்ளை! விசுவாசம் என்றால் ஓ.பி.எஸ் என்று சொல்லும் அளவுக்கு, அம்மையார் ஜெயலலிதா அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவர். விசுவாசத்தைக் காட்டியவர் மட்டுமல்ல; ஒரு உலக மகா துரோகியை உலகுக்கு அடையாளம் காட்டியவர் அவர்தான். அப்படிப்பட்ட நம்முடைய ஓ.பி.எஸ். அவர்களுக்கு, நம்முடைய வெற்றிச் சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் எல்லாம் வாக்கினை வழங்கிட வேண்டும்.

அடுத்து, கம்பம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் கம்பம் ராமகிருஷ்ணன் அவர்கள். கம்பத்தைத் தன்னுடைய அடையாளமாகப் பெயரில் இணைத்துக் கொண்டவர். தேனி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், உங்களில் ஒருவராக இருக்கும் இவர், ஏழாவது முறையாகக் கம்பம் தொகுதியில் போட்டியிடுகிறார். அவருக்கு மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர் மகாராஜன் அவர்கள். ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருந்தவர். கடந்த இரண்டு முறையாக உங்களுடைய எம்.எல்.ஏ.-வாகச் சிறப்பாகப் பணியாற்றியவர். இப்போது மூன்றாவது முறையாகக் களமிறங்குகிறார். மகாராஜனுக்கு மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

அடுத்து, பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி. நமது வெல்லும் வேட்பாளர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த சக்திவேல் என்கிற ஆற்றலரசு அவர்கள். கொள்கை உறவாக உடன் இருக்கும், எழுச்சித் தமிழர் அன்பு சகோதரர் தொல். திருமாவளவன் அவர்களின் ஆதரவு பெற்ற வேட்பாளர்! மக்கள் பணியாற்ற வந்திருக்கும் இவருக்கு, பானை சின்னத்தில் உங்கள் பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

இந்த நான்கு வேட்பாளர்களின் வெற்றி உறுதியா? உறுதி (மக்கள்). சட்டமன்றத்தில் உங்களுக்கு சீட் கன்பார்ம் ஆகிவிட்டது! அதனால் நீங்கள் உட்காரலாம்!

### கன்னியாகுமரி முதல் திருவள்ளூர் வரை வசதிகள்!

நம்முடைய திராவிட மாடல் அரசைப் பொறுத்தவரை, வள்ளுவ முனை இருக்கும் கன்னியாகுமரியில் இருந்து, தமிழ்நாட்டின் வடக்கு வாசலாக இருக்கும் திருவள்ளூர் வரைக்கும் வளர்ச்சி அடைய வேண்டும்! அதற்குத் தேவையான அத்தனை உட்கட்டமைப்பு வசதிகளையும் உருவாக்கிக் கொண்டு இருக்கிறோம்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்தத் தேனி மாவட்டத்திற்கு,

பாளையம்பரவு வாய்க்கால் திட்டம்,

18-ஆம் கால்வாய் திட்டம்,

சுருளி ஆறு மின் நிலையம்,

மேல சொக்கநாதபுரம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம்,

ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி தரும் பி.டி.ராசன் கால்வாய்த் திட்டம்,

வைகைக் கால்வாய் சீரமைப்பு,

வராக நதியில் சோத்துப்பாறை அணை,

காமாட்சிபுரம், கடமலைக்குண்டு, மார்க்கையன்கோட்டை பகுதிகளில் துணை மின் நிலையங்கள் என ஏராளமான பணிகளைச் செய்திருக்கிறோம்.

இவற்றின் தொடர்ச்சியாக, நம்முடைய திராவிட மாடல் அரசில் செய்யப்பட்டிருக்கும் திட்டங்களில் சிலவற்றை நான் ஹைலைட்டாகச் சொல்ல விரும்புகிறேன்.

வீரபாண்டி அருகே கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,

தப்புக்குண்டு சாலையில் அரசு சட்டக் கல்லூரி,

கம்பம் தொகுதியில், கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் பேரூராட்சி பகுதிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்,

பதினெட்டாம் கால்வாய் தூர்வாரும் பணிகள்,

சின்னமனூர் நகராட்சி பகுதியில் சாலைகள்,

ஆண்டிப்பட்டி, வண்டியூர், சக்கம்மாள்பட்டி, சேடப்பட்டி, டி.சுப்புலாபுரம் பகுதியில் 11 பாலங்கள்,

தேக்கம்பட்டியில் முருங்கை ஆராய்ச்சி மையம்,

குமுளியில் நவீன பேருந்து நிலையம்.

பெரியகுளத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதல் பள்ளிக் கட்டடம், அங்கன்வாடி மையம், சமுதாய கூடம்,

80 கோடி ரூபாய் மதிப்பில், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கூட்டு நீர் திட்டம் என ஏராளமான சாதனைகளைச் செய்திருக்கிறோம்.

இப்படி நாம் சாதனைச் சரித்திரம் தொடர உங்களுடைய ஆதரவைக் கேட்கிறோம்.

### துரோகம் செய்யும் பா.ஜ.க.வை வளர்க்க வாக்கு கேட்கும் பழனிசாமி!

ஆனால், பழனிசாமி யாருக்காக - எதற்காக வாக்கு கேட்க வருகிறார் என்றால், தமிழ்நாட்டிற்குத் துரோகம் செய்யும் பா.ஜ.க.வை வளர்ப்பதற்காக - தமிழ்நாட்டைப் பா.ஜ.க.வுக்குத் தாரை வார்ப்பதற்காக வெட்கமே இல்லாமல் வாக்குக் கேட்கிறார். பழனிசாமி அமைத்திருக்கும் N.D.A. கூட்டணியால், தமிழ்நாட்டிற்கு ஒரே ஒரு நல்லதாவது நடக்கிறதா? தமிழ்நாட்டிற்குத் கெடுதல் செய்ய ஊழல்வாதிகளை மிரட்டி உருவாக்கப்பட்டிருக்கும் கூட்டணிதான், பழனிசாமி பாதம்தாங்கும் பா.ஜ.க. கூட்டணி!

நானும் பிரதமர் மோடி அவர்களைப் பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறேன்.. தமிழ்நாட்டிற்குச் செய்த ஒரு சிறப்புத் திட்டத்தையாவது சொல்லுங்கள் என்று கேட்கிறேன்... இதுவரைக்கும் அவரிடமிருந்து பதில் வரவில்லை... அதேபோன்று, அடிமைசாமியைப் பார்த்து, உங்களுடைய ஆட்சியில் செய்யப்பட்ட திட்டங்கள் என்னென்ன என்று பட்டியலிடுங்கள் என்று கேட்டுக் கொண்டே இருக்கிறேன்.. அதற்கும் பதில் இல்லை! இப்படி, தமிழ்நாட்டிற்கு எதையும் செய்யாத இவர்களுக்கு, நீங்களும் வாக்கு இல்லை என்று சொல்ல வேண்டும்!

பக்கத்தில் இருக்கும் மதுரைக்கும், அதே போன்று, திருச்சி - கோவைக்கும் மெட்ரோ கேட்டோம்... அனுமதி தரவில்லை!

ஒசூர் விமான நிலையத்திற்கு அனுமதி தரவில்லை.

சென்னை மெட்ரோ திட்டத்திற்கு முழுமையான பணத்தை இதுவரை தராமல் இழுத்தடிக்கிறார்கள்!

இந்தியைத் திணிக்க வேண்டும் என்று, நம்முடைய வீட்டுக் குழந்தைகளின் படிப்புக்குத் தர வேண்டிய நிதியைக் கூடத் தராமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

3 ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான ஜல்ஜீவன் இயக்கத்திற்கான மானியத்தைத் தராமல் இழுத்தடிக்கிறார்கள்.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தர வேண்டிய 2 ஆயிரத்து 246 கோடியை இதுவரை தரவில்லை.

இதையெல்லாம் பழனிசாமி என்றைக்காவது ஒரு நாளாவது தட்டிக் கேட்டிருக்கிறாரா?

தொடர்ச்சி 6 –ஆம் பக்கம்

### தமிழ்நாடு தலைநிமிர்ந்தே இருக்க வேண்டும்!

**இந்தப் போரில் வெற்றி பெற்றால்தான், எதிர்காலத்தில் நம்முடைய தமிழ்நாடு – தமிழ்நாடாக இருக்கும், இல்லை என்றால், தட்சிணப் பிரதேசத்திலேயோ – யூனியன் பிரதேசத்திலேயோ நாம் உரிமையே இல்லாமல் இருப்போம்! இந்த நிலை ஏற்படாமல் தமிழ்நாடு தலைநிமிர்ந்தே இருக்க வேண்டும் என்றுதான், நாட்டுக்கே வழிகாட்டியாகத் திராவிட மாடல் அரசை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.**